**கொழும்பு மாநகர - வெள்ளத் தடுப்பை நோக்கிய நகர்ப்புற சுற்றுச்சூழல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2016**

---

கொழும்பு மாநகர - வெள்ளத் தடுப்பை நோக்கிய நகர்ப்புற சுற்றுச்சூழல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 செப்தெம்பர் 12 ஆந் திகதிய ரீஎவ் 011617 ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் நியம நிபந்தனையின் 2.07 (பீ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் மானிய உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சாகவிருந்த தற்போதைய மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் நிறைவேற்றல் முகவராகவும் நகர அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் கொழும்பு மாநகர சபை நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் அமுலாக்கல் முகவர்களாகவும் உள்ளன. இயற்கை பேரழிவுகளுக்கான இலங்கையின் நகர்ப்புற சுற்றுச்சூழல்களின் பாதிப்பை இனம்காணல், மதிப்பீடு செய்தல் மற்றும் குறைத்தல் என்பவற்றுக்கு இலங்கை அரசாங்கத்தின் இயலளவை அதிகரித்தல் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் நோக்கமாகும். மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 118.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 900,000 ஐ சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் மொத்தமாக வழங்குவதற்கு இணங்கப்பட்டது. நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் அதன் நடவடிக்கைகளை 2012 செப்தெம்பர் 12 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2014 யூலை 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் செயற்பாட்டுக் காலப்பகுதி பின்னர் 2017 சனவரி 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் நிதி விளைவுகள் 2014 திசெம்பர் 31 வரை கொழும்பு தலைநகர் நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களுடன் ஒன்றிணைத்து சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இலிருந்து முடிவடைந்த ஆண்டிற்காக நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கான நிதிக்கூற்றுக்களை தனியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3 **நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.4 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில்

சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) நம்பிக்கைப்பொறுப்பு நிதிய முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப வைப்புக்கள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்பதும்,

(ஒ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) நம்பிக்கைப்பொறுப்பு நிதியமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட டொலர் கணக்கிற்கான ஆரம்ப வைப்புக்கள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) மானிய உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | மானிய உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஏற்பாடு | பயன்படுத்திய நிதிகள் மீளாய்வாண்டின் போது | | பயன்படுத்திய நிதிகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடீஏ | 0.90 | 118.80 | 80.00 | 0.16 | 23.01 | 0.25 | 35.44 |

மேற்குறிப்பிடப்பட்ட தகவலின் பிரகாரம், ரூபா 118.80 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 900,000 மொத்த ஒதுக்கீட்டில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாடுகளின் 04 வருடங்கள் கடந்த பின்னர் ரூபா 35.44 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 250,827 மாத்திரம் பயன்படுத்தியிருந்தது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொழும்பு மாநகர ஒன்றிணைக்கப்பட்ட வெள்ள இடர் மதிப்பீடு, வெள்ள இடர் குறைப்பிற்கான தந்திரோபாயங்களை தயாரித்தல் மற்றும் பரிந்துரை செய்தல், ஈரநில பாதுகாப்பிற்கான திட்டமொன்றை தயாரித்தல், காணிகளின் நீர் தரம் மற்றும் மணலை பரிசோதித்தல், போன்ற நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் முக்கிய நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதியளவில் பூர்த்தி செய்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் அத்தகைய நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) இதற்கு மேலதிகமாக, கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு முறைமையினை அபிவிருத்தி செய்தல் அமுலாக்கல் முகவர்களுக்கு உதவி செய்தல் மீதான நடவடிக்கைகள் 2015 ஆகஸ்ட் அளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அத்தகைய நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமானது செயற்திட்ட முகாமைத்துவம், கொள்வனவுகள் நிதி தொடர்பாடல் பொது கவனயீர்ப்பு மற்றும் செயற்பாடுகளின் விடயங்களின் அமுலாக்கல் முகவர்களுக்கு உதவி செய்யும் நிலமையில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் இருக்கவில்லை. ஆகையால் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் இயற்கை அனர்த்தத்திற்காக நகர்ப்புற சூழல் பாதிப்பை குறைத்தல் மீதான நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் குறிக்கோள்களை அடைதல் மீதான இடர்கள் கணக்காய்வில் உட்படுத்த முடியாதிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெள்ள குறைப்பு தந்திரோபாயங்களினை பரிந்துரை செய்தல் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டமொன்றை தயார்ப்படுத்தலிற்கான ஆலோசனை சேவை மீதான ஒப்பந்தமானது கொள்வனவு நடைமுறைகளின் முறையற்ற ஒதுக்கீடு காரணமாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 18 மாதங்கள் காலதாமதத்துடன் வழங்கப்பட்டிருந்தது. அதனால் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கான காலம் 2017 சனவரி 31 வரை மேலும் 02 வருடங்களுக்கு நீடிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஈரநிலத்திற்கான பிரதான திட்டத்தை தயாரிப்பதற்கு கொழும்பு மாநகர பிரதேசத்தினும் இலங்கை நீர் வழிகள் மற்றும் ஏரிகளினது நீர்த் தரத்தின் மீதான மதிப்பீட்டை மேற்கொள்வதற்கும் ஆலோசனையாளர்களை தெரிவு செய்வதற்காக செயற்திட்ட முகாமைத்துவ பிரிவானது விலைக் கூறுகளை அழைத்திருந்தது. செயற்திட்ட முகாமைத்துவ பிரிவால் தயாரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு முரணாக உரிய ஒப்பந்தமானது முதலாவது தகைமையுள்ள நிறுவனத்தை தெரிவு செய்வதற்கு பதிலாக இரண்டாவது தகைமையுள்ள நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. இதற்கான காரணங்கள் கணக்காய்விற்காக விண்ணப்பிக்கப்பட்டிருக்கவில்லை.